
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1303

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

174

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **தி.தங்கப்பன்** அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# தி.தங்கப்பன் கோட்டைகளைத் தகர்த்தெறிந்த தம்பி!



*1967-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல். தமிழ்நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்பட்டதும், கழகம் ஆட்சிக் கட்டிலில் ஏறிய திருப்புமுனைத் தேர்தல் என்பதை அறிவோம். அந்தத் தேர்தலில், அதிர்ச்சிகரமான தோல்விகளும் ஆச்சர்யமான வெற்றிகளும் உள்ளன. விருதுநகரில் காமராஜர் தோற்றது பலருக்கு அதிர்ச்சி அளித்த நேரத்தில், இராமநாதபுரத்தில் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த வேட்பாளரை எதிர்த்து சாதாரண கழகத் தொண்டர் வெற்றிபெற்றது, ஆச்சர்யமாகப் பேசப்பட்டது. அப்படி வரலாற்றுச் சாதனையை நிகழ்த்திய கழகத் தொண்டர்தான் தி.தங்கப்பன். முத்தமிழறிஞர் கலைஞரின் நம்பிக்கைப் பெற்ற இராமநாதபுரம் நகரக் கழகச் செயலாளர், 'முகவை மாவீரன்' எனப் போற்றப்பட்ட உடன்பிறப்பு.*

*சுதந்திர இந்தியாவில், மன்னராட்சி அடையாளங்கள் மக்கள் மனத்தில் செல்வாக்கு செலுத்திக்கொண்டிருந்த காலத்தில், இராமநாதபுரம் சமஸ்தான மன்னரை எதிர்த்து, சாதாரண கழகத் தொண்டரான தங்கப்பனை நிறுத்தி, கழகம் வெற்றிபெற்றது சாதாரணமானதல்ல; அடித்தட்டு மக்களின் அரசியல் எழுச்சி அது. செய்தது கழகம். செய்ய வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.*

*இராமநாதபுரம் சமஸ்தானத்தின் மன்னர் சண்முக ராஜேஸ்வர சேதுபதி. இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும் செல்வாக்குடன் திகழ்ந்தவர். மன்னர் மானியம் ஒழிக்கப் பட்டாலும், மன்னரின் செல்வாக்கு ஒழிக்கப்படவில்லை. 1952-ஆம் ஆண்டு தேர்தலில் தொடங்கி, 1957, 1962 தேர்தல்களிலும் அவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். காங்கிரஸ் அமைச்சரவையிலும் இடம்பெற்றார்.*

*அவருடைய தேர்தல் பிரச்சாரமே ஒரு வித்தியாசமானது. மனுத்தாக்கல் செய்வார்; ஆனால், வீடு வீடாகச் சென்று வாக்குக் கேட்க செல்ல மாட்டார். வாக்காளர்களுக்கு கையெடுத்து கும்பிடவேண்டிய அவசியமில்லை. அரண்மனையின் செல்வாக்கே போதுமானது என்ற எண்ணத்தைக் கொண்டவர். அப்படியான நிலையில்தான், 1967-ஆம் ஆண்டு தேர்தல் அறிவிப்பு வந்தது. 1957-ஆம் ஆண்டு முதலே கழகம் தேர்தலைச் சந்தித்தாலும், இராமநாதபுரம் தொகுதியில் போட்டியிடவில்லை. 1962-லும் அதே நிலை நீடித்தது. 1967-இல் கூட்டணிக் கட்சிகள் அந்தத் தொகுதியை தி.மு.க.வுக்கே விட்டுவிட்டன.*

*1967-ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் பட்டியலை பேரறிஞர் அண்ணா தயாரித்துக்கொண்டிருந்தார். இராமநாதபுரம் தொகுதி மட்டும் வெற்றிடமாக இருந்தது. அந்தப் பட்டியலைப் பார்த்த முத்தமிழறிஞர் கலைஞர், "அண்ணா, இராம நாதபுரத்தை வாங்கிக்கொண்டு, அப்படியே விட்டுவிடுகிறீர்களே?" என்று கேட்கிறார். பேரறிஞர் அண்ணாவிடம் கலைஞர் கேட்ட அந்தக் கேள்விதான் தேர்தல் முடிவையே மாற்றியது.*

*"நம்ம பிள்ளைகள் யாரும் அங்கே போட்டியிடத் தயாரில்லை" என்று கூறுகிறார், மாவட்டச் செயலாளர் தென்னரசு. "இனி என்ன இருக்கிறது?" என்கிறார் அண்ணா.*

*"வேட்பாளர் பெயர் தங்கப்பன். எனக்காக அவரை அறிவியுங்கள் அண்ணா. தென்னரசிடம் நான் பேசிக்கொள்கிறேன்" என்றார் கலைஞர். பேரறிஞர் அண்ணா அதை ஏற்றுக் கொண்டார். குறிப்பாக, கலைஞரின் தேர்தல் பணி மீது கொண்ட நம்பிக்கை, தென்னரசு அவர்களின் கழகப் பணி மீது கொண்ட நம்பிக்கை மட்டுமல்ல; களத்தில் உழைக்கும் ஒரு தொண்டனின் பின்னால், மக்கள் நிற்பார்கள் என்கிற நம்பிக்கையும் கொண்டிருந்தார், பேரறிஞர் அண்ணா.*

*தங்கப்பன் 1930-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் தேதி பிறந்தவர். தந்தை பெயர் திருமலை. இளமையிலேயே பெரியார், அண்ணா ஆகியோரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, கழகத்தின் தொண்டராகப் பொதுவாழ்வைத் தொடங்கினார். பின்னர், இராமநாதபுரம் நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று, அந்தப் பகுதியில் கழகத்தை வளர்த்தவர். 1965-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்நாட்டை உலுக்கியபோது, இராமநாதபுரம் பகுதியிலும் போராட்டக் களம் தீவிரமடைந்தது. ஷேக் சுல்தான், 'மிசா' மாரிமுத்து உள்ளிட்ட கழகத் தோழர்களுடன் இணைந்து தங்கப்பன் களத்தில் நின்றவர்.*

> **இராமநாதபுரத்தின் எளிய தொண்டன், ராஜாவுக்கு எதிராகச் சாதித்த வரலாற்றுப் பெருமைகளை, 'முரசொலி' பக்கங்களில் இரங்கலாகப் பதிவு செய்தார்.**

*1967-ஆம் ஆண்டு தேர்தலில் மன்னரை எதிர்த்து, தி.மு.க. வேட்பாளராகக் களம் கண்டபோது, மன்னர் பிரச்சாரத்துக்கே வரவில்லை. ஆனால், கலைஞர் களத்தில் இறங்கினார். தங்கப்பனுடன் வீடு வீடாகச் சென்றார். வீதி வீதியாக மக்களைச் சந்தித்தார். தங்கப்பன் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, கழகத்தின் செல்வாக்கினை, கலைஞரின் நம்பிக்கையை மெய்யாக்கினார்.*

*தங்கப்பன் அவர்கள் வெற்றி, 1967-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நிகழ்ந்த மிகப்பெரிய அரசியல் மாற்றத்தின் அடையாளமாக அமைந்தது. அதற்கு மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது. தங்கப்பன் அரண்மனை வாசலில் குதிரை வண்டி ஓட்டுபவர் என்பதுதான். குதிரை வண்டி ஓட்டுபவரிடம் மன்னர் தோற்றார் என்கிற வரலாறு அன்று எழுதப்பட்டது.*

### சட்டமன்றப் பணிகள்

*1967-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டு வரை சட்டமன்ற உறுப்பினராக இருந்த தங்கப்பன், சட்ட மன்றத்தில் இராமநாதபுரம் மக்களின் குரலாக ஒலித்தார். வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதியின் குடிநீர்ப் பிரச்சினை, விவசாயிகளின் சிக்கல்கள், விவசாயக் கொள்முதல் தொடர்பான குறைகள், இளைஞர்களின் வேலைவாய்ப்புத் தேவைகள் உள்ளிட்ட பிரச்சினைகளை கலைஞரின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.*

*'மன்னர் மானிய ஒழிப்பு' போன்ற முக்கியமான சமூக-அரசியல் மாற்றங் களின் காலகட்டத்திலும், தனது சொந்தத் தொகுதியில் நிகழ்ந்த மாற்றத்தை ஜனநாயகத்தின் வெற்றியாகச் சுட்டிக்காட்டி, மன்னர் மானியம் ஒழிப்புக்கு சட்டமன்றத்தில் குரல் கொடுத்துள்ளார்.*

*தங்கப்பன் மன்னரை வீழ்த்தியது, கழகத்தின் மீது மக்கள் வைத்த நம்பிக்கை. இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினரின் வேகமும் இருந்தது. அந்த நம்பிக்கையையும் வேகத்தையும் தனது உழைப்பால் வளர்த்த தங்கப்பன், எதிர்பாராத விதமாகத், தனது 41-வது வயதில் 1971-ஆம் ஆண்டு உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.*

*தங்கப்பனின் திடீர் மறைவுச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த கலைஞர், இராமநாத புரத்தின் எளிய தொண்டன், ராஜாவுக்கு எதிராகச் சாதித்த வரலாற்றுப் பெருமைகளை, 'முரசொலி' பக்கங்களில் இரங்கலாகப் பதிவு செய்தார்.*

*1967-ஆம் ஆண்டு தேர்தலில் தங்கப்பனை வேட்பாளராக்கத் தான் எடுத்த முயற்சி, அதற்கு அண்ணா காட்டிய தயக்கம் ஆகியவற்றை எழுதிய கலைஞர், "மண்ணின் எளிய மைந்தனாக உருவெடுத்து, கோட்டைகளைத் தகர்த்தெறிந்த தம்பி தங்கப்பனின் மறைவு, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இயக்கத்திற்கும் பேரிழப்பு" என்ற தன் இரங்கல் உணர்வை வெளிப்படுத்தியுள்ளார். ஆண்டுகள் பல கடந்தும் அந்த பேரிழப்பினை நினைவு கூர்கின்றனர் முகவை கழகத்தினர்.*

**...துடிக்கும்**

## ஒன்றுசேர்ந்து சீரழிக்கிறார்கள்!

த.வெ.க. ஆட்சி, விபரீதமான மக்கள்நலக் கூட்டணியின் முயற்சி, தமிழ்நாட்டை நாசப்படுத்திக்கொண்டிருக்கிறது என முகநூலில் பதிவிட்டுள்ளார், ஆவணப்பட இயக்குநர் அமுதன். அவரது பதிவில்...

"நடிகரின் ஆட்சி கொடூரமாக இருப்பது போக, அதை ஆதரிக்கும் கட்சிகள், நபர்கள், ஊடகங்கள் ஆகியோரின் செயல்பாடுகள் அதைவிடக் கொடூரமாக இருக்கின்றன. இதற்கிடையே, பா.ஜ.க. எந்த சத்தமும் இல்லாமல் அமைதியாக இருக்கிறது. இந்த ஆட்சியின் அவலத்தைப் பற்றி, தி.மு.க. மற்றும் அதன் ஆதரவாளர்கள் தவிர, யாரும் வாயைத் திறக்கவில்லை.

நடிகரும் அவரது ரசிகர்களும் மற்றும் பலரும் (!) சேர்ந்து, தி.மு.க.வைத் தோற்கடிப்பதாக / பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு, தமிழ்நாட்டைச் சிதைத்துக்கொண்டிருக்கின்றனர். இடதுசாரிகளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. கோமாளியை ஆதரிப்பதா, கொள்கையைக் கடைப்பிடிப்பதா? ஒரே குழப்பம்!

காங்கிரஸ் கட்சி, என்ன சொல்லி இங்கு அரசியல் செய்யப் போகிறது? குறுக்கு வழியில் அதிகாரத்தைப் பிடித்தது தவிர, அவர்கள் எதையும் சாதிக்கவில்லை. வி.சி.க.விற்குத் தமது வாக்குகளைக் கொண்டுபோன நடிகரைவிட, தம்மை ஆதரித்த தி.மு.க. மேல்தான் கடும்கோபம் வருகிறது. சுயநலக் காரணங்களுக்காக, தி.மு.க. அல்லாத அனைவரும் அரசியல் தற்கொலை முயற்சியில் உள்ளனர்.

ஒரே ஒரு தோல்வி, முன்னாள் தோழமைக் கட்சிகளின் பலவீனத்தைப் படுவேகமாக, அகோரமாக அம்பலப்படுத்திவிட்டது. ஒன்று மட்டும் நிச்சயமாகக் கூறமுடியும். இதுவரை தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் இங்குள்ள கூட்டணி கட்சியினரைச் சீராட்டிப் பாராட்டி, நாசப்படுத்தியுள்ளனர். செல்லம் கொஞ்சிக் கெடுத்து வைத்துள்ளனர். அவர்கள் இருவரில் ஒருவர் அதிகாரத்தில் இல்லாமல், இக்கட்சிகளுக்கு என்ன செய்வது என்று தலைகால் புரியவில்லை. இப்போது நடப்பதும் ஒரு வகையான விபரீதமான மக்கள்நலக் கூட்டணி முயற்சியே. இவர்கள் ஒன்றுசேர்ந்தால், சீரழிவுதான் சாத்தியம் என்பது நிரூபணம் ஆகிவிட்டது. ஆனால், தி.மு.க.விற்கு இது மிகுந்த நல்ல காலம். அக்கட்சியின் முக்கியத்துவத்தைத் தொண்டர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும், எதிரிகளுக்கும் துரோகிகளுக்கும், பொதுமக்களுக்கும் காலம் பாடம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



வி.என்.ஷாஜகான்



### மாணவர் கழகப் பொதுக்கூட்டம்!

1979-ஆம் ஆண்டு உடுமலை நகரத்தில், காமராஜரைத் தேர்தலில் வீழ்த்திய திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தலைவர் பெ.சீனிவாசன் அவர்களை அழைத்துவந்து பொதுக்கூட்டம் நடத்தினேன். அப்போது, மாணவர் கழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த நான், கூட்டத்துக்கு ஏற்பாடு செய்ததுடன் தலைமையும் தாங்கினேன். அதன் பின்னர், இளைஞர் அணியில் பொறுப்பு வகித்தேன். காலங்கள் ஓடினாலும் கழகப் பற்று என்றும் நீங்காது!

**– வி.என்.ஷாஜகான், உடுமலைப்பேட்டை, மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர், திருப்பூர் தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சென்னை மாநகராட்சி மன்றம்!

1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி மன்றத்தில், காங்கிரஸாரின் 20 ஆண்டுக்கால ஆதிக்கம் குலைந்தது. மாநகராட்சித் தேர்தலில் 100 இடங்களிலும் போட்டியிட்ட காங்கிரஸ், 37 இடங்களையே கைப்பற்றியது. 90 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க., 45 இடங்களைக் கைப்பற்றியது. கழகத்தின் தேர்தல் பொறுப்பாளராக கலைஞர் செயல்பட்டார். தேர்தல் வெற்றிக்குப் பின்னர், தேர்தல் பணியில் ஈடுபட்டவர்களுக்கும், சென்னை வாக்காளர்களுக்கும், கழகப் பொதுச்செயலாளர் நாவலர் நன்றி கூறினார். சென்னை மாவட்டத்தின் சார்பாக, கடற்கரையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900